# 27-11-2023 செய்தி

## நகர்ப்புற மாசுபாட்டை போக்குவரத்து துறையை மின்மயமாக்கல்

**பற்றி**

- நகர்ப்புற புகைமூட்டத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பானது PM 2.5 மற்றும் PM10 மாசுபாடு ஆகும், இது போக்குவரத்து மற்றும் கட்டுமானத் துறையால் ஏற்படுகிறது.

**லாரிகள் அதிகரிப்பு**

- ஏற்கனவே இயங்கும் 70 லட்சம் லாரிகளில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 9 லட்சம் புதிய லாரிகளில் இந்திய சாலைகளில் சேர்க்கப்படுகின்றன.
- இந்தியா ஆண்டுக்கு 2 டிரில்லியன் டன் கிலோமீட்டர் சரக்குகளை லாரிகளில் கொண்டு செல்கிறது.
- இந்த டிரக்குகள் இந்திய எண்ணெயில் நான்கில் ஒரு பங்கிற்கு மேல் பயன்படுத்துகின்றன.
- 90% க்கும் அதிகமான சாலை போக்குவரத்து ளீநு2 உமிழ்வுகளுக்கு காரணமாகிறது.
- இந்த புதிய லாரிகள் அனைத்தும் டீசல் என்ஜின்களால் இயக்கப்பட்டால், நமது நகரங்கள் ஊனி2.5 மாசுபாட்டின் பெரும் தாக்குதலை எதிர்கொள்ளும்.

**சாத்தியமான தீர்வுகள்**

- இந்தியா ஏற்கனவே இரயில் சரக்கு போக்குவரத்தை மின்மயமாக்கியுள்ளது, ஆனால் அது நாட்டில் கொண்டு செல்லப்படும் சரக்குகளில் சுமார் 20% பங்களிக்கிறது.
- 2030 ஆம் ஆண்டளவில் இந்தியாவில் 7,750 மின் லாரிகளை இயக்க திட்டமிட்டுள்ளது.
- அது நிறைவேறினால், 2050 வரை 800 பில்லியன் லிட்டர் டீசலை நாடு சேமிக்கும்.
- சில தேசிய நெடுஞ்சாலைகளை பசுமை சரக்கு வழித்தடங்களாக அறிவிப்பது நல்ல தொடக்கமாகும்.

## உயர் நீதிமன்றத்தில் ஒலிக்க வேண்டும் தமிழ்

**பின்னணி என்ன?**

- 1862 இல் மெட்ராஸ் உயர்நீதிமன்றம் தொடங்கப்பட்டது. 85 ஆண்டுகள் ஆங்கிலேயர்களின் காலனி ஆதிக்க நாடாக இருந்தது இந்தியா. கடந்த 75 ஆண்டு காலச் சுதந்திர இந்தியாவில் உயர் நீதிமன்றத்தில் தமிழ் வழ்காகடு மொழியாக்கப்படவில்லை.
- அரசமைப்புச் சட்டப் பிரிவு 348(2) இன்படி, குடியரசுத் தலைவரின் முன் இசைவுடன், ஒரு மாநிலத்தின் ஆளுநர் இந்திய அல்லது அந்தந்த மாநில அலுவல் மொழியை ஆங்கிலத்துடன் சேர்த்துக் கூடுதல் உயர் நீதிமன்ற அலுவல் மொழியாக்க வழிவகை செய்கிறது.
- அரசமைப்புச் சட்டக்கூறு 348(2) இன்படி அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த 18 நாள்களிலேயே 1950 பிப்ரவரி 14 அன்று ராஜஸ்தான் மாநில ஆளுநர், குடியரசுத் தலைவரின் முன் அனுமதி பெற்று, இந்தியை ராஜஸ்தான் உயர் நீதிமன்றத்தின் அலுவல் மொழியாக்கினார்.
- மத்திய அரசு அலுவல் மொழிச் சட்டம், 1963இல் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின் பிரிவு 7, குடியரசுத் தலைவரின் முன் இசைவுடன் ஒரு மாநிலத்தின் ஆளுநர் இந்தியிலும் அந்தந்த மாநில அலுவல் மொழியிலும் உயர் நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்குவதற்கு வழிவகை செய்கிறது. இச்சட்டமும் நடைமுறைக்கு வந்தது.
- அதன்பிறகு, 1969 இல் உத்தரப் பிரதேசத்திலும், 1971ல் மத்தியப் பிரதேசத்திலும், 1972 இல் பீஹாரிலும் உயர் நீதிமன்ற அலுவல் மொழியாக இந்தி ஆக்கப்பட்டது.
- 1976 இல் அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் இந்தியில் மனுத் தாக்கல் செய்ய அனுமதிக்கப்பட்டது.
- உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் முன்வைக்கும் வாதங்களையும் நீதிபதிகள் அளிக்கும் தீர்ப்புகளையும் தங்களின் தாய்மொழியில் பெறுவது தமிழ்நாட்டு மக்களின் அடிப்படை உரிமை.